# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

**19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),**
**Egmore, Chennai – 600 008.**
**Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377**
**Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in**


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மறு ஆய்வு மனு எண் 56/2016**

திரு. B. சிவக்குமார்,
த/பெ. பி. பாலசுப்பிரமணியன்,
18/117, காந்தி நகர்,
திருப்பூர் ரோடு, காங்கேயம்,
திருப்பூர்

மேல் முறையீட்டாளர்
(திரு. C. சரவணன்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
திருப்பூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
19ஏ, 19பி, ஜோதி நகர்,
பி.என். ரோடு, திருப்பூர் – 641 603.

எதிர்மனுதாரர்
(திருமதி. T. சுமதி, செயற்பொறியாளர்/காங்கேயம்)

**கேட்புரை நாள்: 7.10.2016**

**ஆணை நாள் : 30–12–2016**

திரு. B. சிவக்குமார், த/பெ பி. பாலசுப்பிரமணியன், காந்தி நகர், காங்கேயம் அவர்களின் 8–7–2016 நாளிட்ட மனு, மேல்முறையீட்டு மனு எண் 56/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின்மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 7–10–2016 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து, மின்குறை தீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

அவரது அபராதத்தொகையான ரூ.6,93,009/–(ரூபாய் ஆறு லட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து ஒன்பது மட்டும்) தள்ளுபடி செய்து அவர் தொழில் சிறக்க உதவி புரிந்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

**2. வழக்கின் சுருக்கம் :**

2.1 மின்இணைப்பு எண்.095–003–814, திரு. பி. சிவக்குமாரின் பெயரில் IIIB என்ற பட்டியல் விகிதத்தில் (Tariff)ல் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் அனுமதிக்கப்பட்ட மின்பளு 112 KW ஆகும். மேரிக்கோ என்ற நிறுவனத்தின் ஆர்டருக்கு அந்த மின்இணைப்பில் ஆயில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

2.2 மேற்கண்ட மின் இணைப்பில் மின்னளவி பழுதானதால் 29.4.2014 அன்று மாற்றப்பட்டுள்ளது.

2.3 BOAB ன் தணிக்கையில் 1/2014 முதல் 5/2014 வரையிலான கணக்கீடு காலங்களுக்கு சராசரி பயனீட்டளவு சரியாக கணக்கீடு செய்யப்படவில்லை என்பதால் ரூ.6,93,009/– நிலுவைத்தொகையாக விதிக்கப்பட்டுள்ளது.

2.4 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட நிலவைத்தொகையை ரத்து செய்ய வேண்டும் என்று திருப்பூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார்.

2.5 மன்றம், தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலுவைத்தொகையான ரூ.6,93,009/–ஐ நுகர்வோர் செலுத்தவேண்டும் என்று தன்னுடைய 12.4.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது.

2.6 மேற்கண்ட ஆணையில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவினை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார். மேல்முறையீட்டாளர், 25 சதவீத தொகையை செலுத்தியமைக்கான ரசீதை இணைக்கவில்லை என்பதால் அந்த ரசீதின் நகல் கேட்டு 8.6.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

2.7 மேல்முறையீட்டாளர், ரூ.1,73,252/– உரிமம்தாரரிடம் 12.7.2016ல் செலுத்தியமைக்கான ரசீதின் நகலை சமர்ப்பித்ததால் அவருடைய மனு மேல்முறையீட்டு மனு எண்.56/2016 ஆக பதிவு செய்யப்பட்டது.

**3. <u>மன்றத்தின் தீர்வு</u>**

**3.1** திருப்பூர் மின்பகிர்மான வட்டம் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை **12.4.2016** நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையில் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>Findings of the Forum</u>*

*The petitoner was doing job work for M/s Marico Company, crushing the coconut supplied by them and supplied the coconut oil to the same company in return. The LTCT service 095-002-814 is in the name of the petitoner. The LTCT meter was found defective from 1-2014 and the same was replaced by MRT/Tiruppur on 29.4.2014. The short levy amount of Rs.11222/- was already colected on 16.6.2014 from the consumer, and again the BOAB audit raised a slip for Rs.639009/- vide slip No.70/19.2.2015 for the same period.*

*The petitioner represented the licensee to cancel the audit amont, since there was less production during the above noted period, and submitted the documents for proof. On investigation the licensee earlier stated that there was no job work taken by the petitoner after 21.12.2013 till 5.4.2014. But the petitoner did not produce any related documents for his statement mentioned in the CGRF. Therefore, the petioner was requested to submit the production statments. Sales Tax return, IT statement & Labour statement, in additon to M/s Marico Company's authorised letter and contract deed, within a period of one week, and the same was acknowledged by the petitoner.*

*<u>Order of the Forum</u>*

*On hearing the petitoner statement and the licensee's statment, the related documents and statements were requested from the petitoner within a week. But till now, no such documents nor statements were recieved from the petitioner .*

*Hence, it is ordered that the amount of Rs.639009/- is to be paid by the petitoner as raised by the Audit Branch, and the same should be reported by the licensee on collection.„*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :</u>**

**4.1** மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பு எண்.**095003814** TF 3Bல் மேரிக்கோ நிறுவனத்துக்கு ஜாப் ஒர்க் மூலம் கடந்த **2008** ஆண்டு முதல் எண்ணெய் அரவை செய்து கொடுத்து வருகிறார்.

**4.2** கடந்த **2014**ஆம் ஆண்டு **27.3.2014** அன்று இளமின் பொறியாளர் அவர்கள் மின் அளவு எடுக்கும்போது அவரது மின்இணைப்பு ஒரு மின் பேஸ் சப்ளை வரவில்லை என கூறியதின் மூலம் அறிந்தார். அப்போதே அந்த LTCT ஆம்னிகேட் மின்மீட்டரை மாற்றியதில் மின் மீட்டரை பொருத்த சிறிய டெஸ்ட்டிங் தொகை மட்டு செலுத்தி புதிய மின் மீட்டரை மாற்றிவிடலாமென்று

சொன்னார்கள். அதன் பின்னர் 29.4.2014ம் தேதி அன்று தான் புதிய மின் மீட்டர் பொருத்தப்பட்டது.

4.3 அந்த காலகட்டத்தில் MRT ஆடிட்டிங் மூலம் தெரிவித்த அபராத தொகை ரூ.11,222/– அவர் 16.6.2014ல் செலுத்தி விட்டார். பிறகு BOAB ஆடிட்டிங் மூலம் 1/2014 – 4/2014 வரையிலான காலகட்டத்தில் சராசரி மின்அளவு தொகையாக கணக்கிடப்பட்டு ரூ.6,39,009/– ரூபாயை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்.

4.4 எனவே, அவர் மின் உபயோகம் செய்யாது இருந்த போது போடப்பட்ட மின்தொகையை திரும்ப பெறவேண்டுமென்று அவர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் பதிவு செய்திருந்தார்.

4.5 மேலும் அவர் கூறுவது என்னவென்றால் 28.2.2014 அன்று முடிய உதவி செயற்பொறியாளர் அவர்களால் மின்னளவு கணக்கிடப்பட்டபோது அது சரியாக இயங்கிக் கொண்டிருப்பதை ஒயிட் மீட்டர் கார்டு ரிப்போட்டின் படி தெளிவாக தெரிந்துள்ளது. உதவி மின்பொறியாளர் என்பவர் மிகவும் டெக்னிக்கல் அன்டு குவாலிபைடு நபர் ஆவார்.

4.6 அவர் மேலும் 23.7.2014 (சரியான நாள் 23.3.2014) அன்று கணக்கிட்டபோது தான் மின் மீட்டரில் ஒன் பேஸ் சப்ளை வரவில்லை என்று தெரிவித்துள்ளார்.

4.7 ஆய்வு செய்த தேதியில் 28.2.2014 இருந்து மீட்டரைப் பொருத்திய தேதி 27.4.2014 வரை கணக்கிட்டால் சுமார் இரண்டு மாத காலமாகியுள்ளது. இவ்வாறு LTCT மீட்டராக இருந்தும் இவ்வளவு காலதாமதமாக மீட்டர் மாற்றியக்காரணம் தெரியவில்லை.

4.8 முதலில் MRT ஆடிட்டிங் பண்ணியபோது மீட்டரில் ஒன் பேஸ் வரவில்லை என்று கணக்கிட்டு 28.2.2014 முதல் 27.3.2014 வரையிலான கால கட்டத்தில் ரூ.11,222/– செலுத்துமாறு கேட்டுக்கொண்டார்கள். எனவே அந்தக் தொகையை 16.6.2014 அன்று செலுத்திவிட்டார். அன்று அவர்கள் எலக்ட்ரானிக் மின் மீட்டராக இருந்த போதிலும் அதனை Retrive செய்ய இயலாது என்று கூறி அத்தொகையை கட்டச் சொன்னார்கள். அவர் செலுத்திவிட்டார்.

4.9 எலக்ட்ரனிக் மின் மீட்டர் என்பதால் அதனை அப்பொழுதே டெக்னிக்கல் கம்பெனியிடம் கொடுத்து துண்டிக்கப்பட்ட பேஸ் எந்த தேதி என்று துல்லியமாக கணக்கிடப்பட்டிருந்தால் இன்று அவருக்கு இந்த அபராத தொகை வந்திருக்காது. எனவே, கடந்த 2012–2013 மின் உபயோகத்தை வைத்து சராசரியாக போட்ட மின்தொகை என்பது ஏற்புடையது அல்ல.

4.10 மேலும், வருடம் தோறும் டிசம்பர் முதல் மார்ச் வரையிலான காலகட்டத்தில் போதிய அளவு அரவை இல்லாத காரணத்தினால் குறைந்த மின்தொகை மற்றும் உபயோகித்த மின்அளவை பட்டியல் இட்டு உள்ளார்.

4.11 மேலும், போடப்பட்ட அபராத தொகை 28.2.2014 முதல் 27.3.2014 வரையிலான காலகட்டத்தில் மட்டும் போடப்பட்டிருக்க வேண்டும். அது இல்லாமல் 1.1.2014 முதல் 1.5.2014 வரையிலான காலகட்டத்தில் போடப்பட்டிருப்பது ஏற்புடையது அல்ல.

**5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>**

5.1 மின்இணைப்பு எண்.095–003–814 TF IIIB காந்தி நகர் பகிர்மானம் திரு. ப. சிவக்குமார் என்பவர் பெயரில் 111.86 KW அனுமதிக்கப்பட்ட மின்பளுவுடன் வழங்கப்பட்டு உள்ளது.

5.2 மேற்படி மின்இணைப்பில் 27.3.2014 அன்று மீட்டர் ரீடிங் எடுக்கும் போது ஒரு முனை மின்சாரம் மீட்டரில் பதிவாகாமல் இருப்பது கண்டறியப்பட்டது. இது குறித்து மின்னளவி ஆய்வகம் திருப்பூர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. உதவி செயற்பொறியாளர், மின்னளவி ஆய்வகம் திருப்பூர் அவர்கள் மேற்படி மின்இணைப்பை 29.4.2014 அன்று ஆய்வு செய்து ஒரு பேஸ் PT Fuse போய் விட்டது என்று கூறி மேற்படி ஒரு பேஸ் PT Fuse மாற்றப்பட்டது. அவ்வாறு PT Fuse மாற்றி விட்டு ரீடிங் எடுக்கும்போது மீட்டரில் forward direction scroll button ஆனது வேலை செய்யவில்லை என்று கூறி மீட்டரை மாற்றி விட்டு சென்றார்கள்.

5.3 உதவி செயற்பொறியாளர் மின்னளவி ஆய்வகம் அவர்களின் சோதனை அறிக்கை நாள்15.5.14 ல் கீழ்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

1. B phase PT blown out and the same was replaced.

2. While taking the check reading it was found that the forward button not working.

3. Hence, the existing meter was replaced by a healthy meter of 0.5 class.

4. Data could not be retrieved from the meter hence the average bill may be billed according to filed conditon.

5.4 உதவி செயற்பொறியாளர் மின்னளவி ஆய்வகம் திருப்பூர் அவர்களின் சோதனை அறிக்கையின் பேரில் மேற்படி மின்இணைப்பில் மின்பயனீட்டுக்கான தொகை ரூ.11,222/– மட்டும் 16.6.2014 அன்று வசூல் செய்யப்பட்டுவிட்டது. மேற்படி மின் இணைப்பில் வாரிய தணிக்கைக் குழுவினரால் தணிக்கைத் தாள் 70 நாள் 19.2.2015ன் விடுபட்ட மின்பயனீட்டுக்கான தொகை சராசரி கணக்கீட்டுத் தொகையாக ரூ.6,93,009/– விதிக்கப்பட்டது.

5.5 மேற்படி தணிக்கைத்தாளை மின்உபயோகிப்பாளர் ஒப்புக்கொள்ள மறுத்து மேற்படி காலகட்டத்தில் 1/2014 முதல் 5/2014 வரை தனது தொழிற்சாலையில் மின்உபயோகம் மிகக்குறைவாகவே இருந்தது என்று கூறி மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 11.2.2016 அன்று சென்றுவிட்டார்.

5.6 மேற்படி மின்நுகர்வோர் குறைதீர்க்கும்மன்றத்தில் 11.2.2016 அன்று மனுவுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்த போது மேற்படி 1/2014 முதல் 5/2014 தனது தொழிற்சாலையில் மின்உபயோகம் மிகக் குறைவாகவே இருந்தது என்பதை நிரூபிக்கத் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, மின்நுகர்வோருக்கு விதிக்கப்பட்ட தொகை ரூ.6,93,009/– சரியானதே என்று மின்நுகர்வோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

5.7 1.9.2016 அன்று மனுதாரரின் விண்ணப்பத்தின் மீது மறுவிசாரணை நடத்தப்பட்டது. அவ்விசாரணையின்போது மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்கள் எதுவம் 1/2014 முதல் 5/2014

வரை அவரது தொழிற்சாலையில் மின் உபயோகம் குறைவான பயன்பாட்டில் இருந்தது என்பதை நிரூபிக்க ஏதுவாக இல்லை.

**6. <u>மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை :</u>**

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 7.10.2016 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல் முறையீட்டாளரின் சார்பில் திரு.C. சரவணன் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தனர்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திருமதி. T. சுமதி, செயற்பொறியாளர்/காங்கேயம் அவர்கள் கலந்து கொண்டு தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

**7. <u>மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

7.1 மேல்முறையீட்டாளரின் சார்பில் கேட்புரையில் கலந்து கொண்ட திரு. C.சரவணன் அவர்கள் மேல்முறையீட்டாளருடைய மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி ஜனவரி 14 முதல் மார்ச் 14 வரையிலான காலங்களில் மேரிக்கோ லிமிடெட் கம்பெனிக்கு தேங்காய் அரவை எதுவும் செய்யவில்லை என்பதால் அந்த காலங்களில் தங்களின் மின்சார பயன்பாடு மிகவும் குறைவாக இருக்கும் என்றும் எனவே, அந்த காலங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள மின்னளவு சரிதான் என்று வாதிட்டார். மேலும், மார்ச் 13 முதல் மார்ச் 14 வரையிலான காலங்களுக்கு எவ்வளவு தேங்காய் அரைக்கப்பட்டது அதன் மதிப்பு எவ்வளவு என்றும் மேரிக்கோ லிமிடெட் அவர்களுக்கு சமர்ப்பித்த பில்களின் நகல்களையும் சமர்ப்பித்துள்ளார்.

7.3 மேலும், 28.2.2014ல் மின்னளவி பயன்பாடு பதிவு செய்யும்பொழுது மின் அளவை சரியாகத்தான் உள்ளது என்பது மின்கட்டண அட்டவனையின் பதிவின்படி தெரிகிறது. அடுத்த மாதம் மின்னளவு பதிவு செய்யும்பொழுது தான் ஒரு பேஸ் சப்ளை வரவில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே, 28.2.2014 முதல் 27.3.2014 வரைதான் மின்னளவி பழுது

ஆகும். மேலும், மின்னளவி 29.4.2014 அன்று மாற்றப்பட்டுள்ளது என்பதால் அந்த நாள் வரைதான் மின் அளவி பழுது என்று எடுத்துக் கொள்ள முடியும் என்றும் வாதிட்டார்.

7.4 மேல்முறையீட்டாளர், ஜனவரி 14 முதல் மார்ச் 14 வரை தேங்காய் அரவை நடைபெறவில்லை என்பதை உறுதி செய்ய தகுந்த ஆவணங்களை பின்னர் சமர்ப்பித்தாக தெரிவித்து அவற்றை அவரின் 9.11.2016 நாளிட்ட கடிதத்துடன் சமர்ப்பித்து இருந்தார்.

**8. <u>எதிர்மனுதாரர்களின் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

8.1 திருமதி. T. சுமதி, செயற் பொறியாளர் /காங்கேயம் அவர்கள், கேட்புரையில் கலந்து கொண்டு எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 27.3.2014 அன்று மின்னளவீடு பதிவுசெய்யும் பொழுது ஒருமுனை (B phase) மின்சாரம் பதிவு ஆகாமல் உள்ளது கண்டறியப்பட்டது . மேலும், AEE/MRT அவர்களும் மின்னளவியை ஆய்வு செய்து PT fuse எரிந்துள்ளது என்று தெரிவித்துள்ளார். மேலும், fuse renew பண்ணி ரீடிங் எடுக்கும்பொழுது forward direction scroll button வேலை செய்யவில்லை என்பதால் மின்னளவி மாற்றப்பட்டுவிட்டது.

8.3 மின்னளவியில் உள்ள பதிவுகளை பதிவு இறக்கம் பண்ண முடியவில்லை என்றும் AEE/MRT அவர்கள் தெரிவித்துள்ளார்.எனவே, விடுபட்ட மின்பயன்பாட்டு தொகையாக ரூ.11,222/– வசூல் செய்யப்பட்டுவிட்டது என்றும் தெரிவித்தார்.

8.4 தணிக்கை குழுவினரால் தணிக்கை செய்யும்பொழுது 1/2014 முதல் 5/2014 வரை மின்னளவி பழுது என்று சராசரி பயன்பாடு வசூல் செய்யப்படவில்லை என்பதால் விடுபட்ட தொகை ரூ.6,93,009/– வசூல் செய்யப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

8.5 மேலும், தணிக்கைத்துறை மேற்கண்ட தணிக்கை தொகையை வசூல் செய்யவேண்டும் என்று மீண்டும் உறுதிசெய்துள்ளது என்றும் தெரிவித்து அந்த 18.1.2016 நாளிட்ட தணிக்கை துறையின் கடிதத்தையும் அளித்தார்.

8.6 மேலும், மேல்முறையீட்டாளர், மேற்கண்ட மின் அளவி பழுதான காலத்தில் பயன்பாடு குறைவு என்பதற்கு உற்பத்தி குறைவுதான் காரணம் என்பதற்கு ஆதாரமாக வணிகவரித்துறை மற்றும் அரசு துறைகளுக்கு சமர்ப்பித்த ஆவணங்களின் நகல்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லை என்றும் வாதிட்டார்.

**9. <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) மின்னளவி பழுதா ?

(ii) மின்னளவி பழுது என்றால் எந்த காலம் முதல் எந்த காலம் வரை பழுது ?

(iii) மின்னளவி பழுது காலங்களுக்கு நிலுவைத்தொகை ரூ.6,93,009/– என்று விதிக்கப்பட்டுள்ளது சரியா ?

**10. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு :</u>**

10.1 எதிர்மனுதாரர் மின்இணைப்பு எண்.095–003–314ல் 27.3.2014 அன்று மீட்டரில் ரீடிங் எடுக்கும்போது ஒரு முனையில் மின்சாரம் பதிவாகாமல் இருப்பது கண்டறியப்பட்டது என்றும், உதவி செயற்பொறியாளர்/மின்னளவி ஆய்வகம் அவர்கள் ஆய்வு செய்து ஒரு பேஸ் PT fuse போய்விட்டது என்று தெரிவித்து ஒரு பேஸ் PT fuse ஐ மாற்றிவிட்டு ரீடிங் எடுக்கும்பொழுது மீட்டரில் forward scroll button வேலை செய்வில்லை என்று தெரிவித்து மீட்டரை மாற்றி சென்றார்கள் என்று தெரிவித்துள்ளார். மேலும், உதவி செயற்பொறியாளர், மின்னளவி ஆய்வகம் திருப்பூர் அவர்களின் சோதனை அறிக்கை நாள் 15.5.14ன் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார் என்றும் தெரிவித்து வாதிட்டுள்ளார். அதன் நகலையும் அளித்துள்ளார்.

1. B phase PT blown out and the same was replaced.

2. While taking the check reading it was found that the forward button not working.

3. Hence, the existing meter was replaced by a healthy meter of 0.5 class.

4. Data could not be retrieved from the meter hence the average bill may be billed according to filed conditon.

10.2 மேற்கண்ட மின்இணைப்பில் MRT சோதனை செய்து மீட்டரை மாற்றியுள்ளார்கள் என்று தெரிவித்துள்ளதால் AEE/Protection & LTCTயின் 15.5.14 நாளிட்ட அறிக்கையின் சம்பந்தப்பட்ட பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**Remarks :***

1. *As per letter received from AEE/South/Kankeyam, one phase PT missing service was inspected and found B phase PT fuse blown out. Same was renewed.*
2. *While taking the check reading it was found that forward button not working.*
3. *Hence the existing meter was released and replaced by a healthy meter of 0.5 class.*
4. *Check test conducted MF 40 after and before meter checking.*
5. *Billing recomendation.*
   *Data could not be retrieved from the meter and hence may be billed according to filed condition. „*

10.3 மேற்கண்ட உதவி செயற்பொறியாளர்/Protection & LTCT அவர்களின் 15.5.14 நாளிட்ட அறிக்கையின்படி B Phase fuse எரிந்துபோய் விட்டது என்றும் அந்த மீட்டரின் forward button வேலை செய்யவில்லை என்றும் தெரிகிறது. எனவே, மீட்டர் மாற்றப்பட்டுள்ளது.

10.4 மேற்கண்ட தகவல்களின்படி மீட்டரில் forward button வேலை செய்யவில்லை என்பதால் தான் மீட்டர் மாற்றப்பட்டுள்ளது. B Phase PT fuse எரிந்துள்ளதால் அந்த பேஸில் உள்ள மின்பயன்பாடு (consumption) பதிவு ஆகியிருக்க முடியாது. மேலும், மீட்டரில் உள்ள பதிவுகள் பதிவு இறக்கம் பண்ணமுடியவில்லை என்பதால் மீட்டரில் B Phase PT missing என்பது எந்த நாளிலிருந்து என்பது தெரியவில்லை.

10.5 எனவே, மீட்டரில் பதிவு ஆகியுள்ள மின்பயன்பாடு (consumption) பதிவுகள் B Phase PT missing காலங்களில் மற்ற இரண்டு பேஸ்களில் உள்ள மின்பயன்பாடு (consumption)

தான் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்பதால் B Phase PT missing காலத்தில் மின் அளவியில் பதிவு செய்யப்பட்டுள்ள மின்பயன்பாடு உண்மையான பயன்பாட்டைவிட குறைவு என்பதால் அவை தவறு என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11. <u>இரண்டாவது வழக்கெழுவினா விற்கான தீர்வு</u>**

**11.1** மேல்முறையீட்டாளர் **28.2.2014** அன்று உதவி செயற்பொறியாளர், மின்னளவு கணக்கிடும்போது அது சரியாக இயங்கி கொண்டுள்ளது என்பது ஒயிட் மீட்டர் கார்டின் படி தெரிகிறது. உதவி செயற்பொறியாளர் மிகவும் டெக்னிக்கல் மற்றும் குவாலிபைடு நபர் (Technically and Qualified person) என்றும் வாதிட்டுள்ளார்.

**11.2** மேலும், **27.3.2014** அன்று கணக்கீடு செய்யும் பொழுதுதான் மின்மீட்டரில் ஒரு பேஸ் சப்ளை வரவில்லை என்று உதவி பொறியாளர் தெரிவித்துள்ளார். எனவே, **3/2014** லிருந்து மின் மீட்டர் மாற்றிய தேதி வரை தான் அதாவது **29.4.2014** வரைதான் மின்னளவி பழுது. எனவே, **1/2014** முதல் மின்னளவி தவறு என்று தணிக்கை பிரிவினரால் விடுபட்டுபோன தொகை (shortfall) கணக்கீடு செய்யப்பட்டுள்ளது தவறு என்றும் வாதிட்டுள்ளார்.

**11.3** எதிர்மனுதாரர் மேற்கண்ட மின்இணைப்பில் **1/2014** முதல் மின் பயன்பாட்டளவு குறைவாக உள்ளதால் தணிக்கை பிரிவு **1/2014** முதல் **5/2014** வரையிலான காலங்களுக்கு விடுபட்டுபோன தொகை **6/13** முதல் **9/13** வரையிலான காலங்களின் சராசரி பயன்பாட்டின்படி பயன்பாடு என்று எடுத்துக் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

**11.4** மேலும், மேற்கண்ட காலங்களில் மின்இணைப்பில் மின்சார உபயோகம் குறைவாக இருந்தது என்பதை நிரூபிப்பதற்கு வணிகவரித்துறை மற்றும் வேறு அரசுத்துறை சார்ந்த ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லை. எனவே அந்த காலங்களில் மேல்முறையீட்டாளர் தன்னுடைய பயன்பாடு குறைவு என்பதை உறுதிபடுத்தவில்லை என்பதால் அவரின் வாதம் ஏற்புடையது அல்ல என்றும் வாதிட்டுள்ளார்.

11.5 மேல்முறையீட்டாளர் அவர் மாரிகோ லிமிடெட், பாலக்காடு அவர்களிடமிருந்து தேங்காய் கொப்பரை பருப்பு வாங்கி அவர்களுக்கே தேங்காய் எண்ணெய் அரைத்து கொடுப்பதாகவும் அந்நிறுவனத்திற்கு தேங்காய் எண்ணெய் தேவை இல்லாத பொழுது உற்பத்தி நிறுத்தப்படும் என்றும் தெரிவித்து 1/2014 முதல் 3/2014 வரை தேங்காய் கொப்பரை பருப்பு எதுவும் அரைக்கப்படவில்லை என்றும் தெரிவித்து , எனவே, 1/2014 முதல் 5/2014 வரை மின்பயன்பாடு குறைவுதான் என்றும் எனவே, அந்த மாதங்களில் உள்ள பயன்பாடு பதிவு சரியானதுதான் என்றும் வாதிட்டுள்ளார். மேலும், பொதுவாகவே அந்த காலங்களில் தங்கள் தொழிற் சாலையில் உற்பத்தி (production)குறைவாகத்தான் இருக்கும் என்பதால் மின்பயன்பாடு குறைவுதான் என்றும் வாதிட்டுள்ளார்.

11.6 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின்இணைப்பில் ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலங்களின் உற்பத்தி குறைவு என்பதால் மின்பயன்பாடு குறைவு என்று வாதிட்டுள்ளதால் நான் அந்த மின்இணைப்பின் பயன்பாட்டை (consumption)ஐ ஆராய விரும்புகிறேன். எனவே, 2010 முதல் 2016 வரையிலான காலங்களின் பயன்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மாதம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 808 | 23080 | 7815.2 | 14871.6 | 1819.2 | 268 | 2421.2 |
| 2 | 7336 | 23268 | 25639.6 | 26634.8 | 518.4 | 7631.2 | 107.2 |
| 3 | 24632 | 29392 | 22322.4 | 25599.6 | 161.6 | 26744 | 54.4 |
| 4 | 26668 | 23048 | 26056.4 | 11983.6 | 2624.8 | 19207.6 | 160 |
| 5 | 32220 | 14772 | 24569.2 | 20642.4 | 10116.4 | 27157.2 | 14200 |
| 6 | 26612 | 27652 | 35237.6 | 31654 | 22570 | 31499 | 31754.4 |
| 7 | 18404 | 27652 | 3494.5 | 38963.6 | 35953.2 | 34114.4 | 22570.8 |
| 8 | 14504 | 27652 | 2866.8 | 29238 | 23275 | 29628 | 24914.8 |
| 9 | 26612 | 26884 | 29057.2 | 25158 | 19659.2 | 30332 | 24680 |
| 10 | 27440 | 10128 | 23274 | 5300 | 7472.8 | 33552 | |
| 11 | 7440 | 1002 | 19171.6 | 6628.4 | 16030 | 32843.6 | |
| 12 | 34868 | 1004.8 | 9881.2 | 17226.8 | 29155.6 | 21796.4 | |

11.7 மேற்கண்ட அட்டவணையிலுள்ளள பயனீட்டளவை ஆராய்ந்து பார்க்கும்பொழுது மேற்கண்ட மின்இணைப்பின் பயன்பாடு ஒரே சீராக இல்லை. ஒவ்வொரு ஆண்டிலும் குறைந்த அளவு மற்றும் அதிகம் அளவு பதிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| Year | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|
| Min | 808 | 1002 | 7815.2 | 5300 | 161.6 | 268 | 54.4 |
| Max | 34868 | 29392 | 35237.6 | 38963.6 | 35953.2 | 34144.4 | 31754.4 |

11.8 மேலும், 1,2,3,4 என்ற மாதங்களின் பயன்பாடு பொதுவாக குறைவு என்று மேல்முறையீட்டாளர் வாதிட்டுள்ளார். எனவே, அந்த மாதங்களில் உள்ள மின்பயன்பாட்டை ஆராய்ந்து பார்த்ததில் கீழ்கண்டவைகளை அறிய முடிகிறது.

(i) ஜனவரி மாதத்தை பொருத்த வரையில் 2011 மற்றும் 2013ம் ஆண்டுகள் தவிர மற்ற வருடங்களின் பயன்பாடு குறைவாகத்தான் உள்ளது.

1/10 – 808,

1/12 – 7815.2,

1/2014 – 1819.2,

1/2015 – 268,

1/2016 – 2421.2

(ii) பிப்வரி மாதத்தை எடுத்துக்கொண்டால் 2010, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் மட்டும்தான் மின்சாரப்பயன்பாடு குறைவாக உள்ளது.

2/10 – 7336

2/14 – 518.4

2/15 – 7631.2

2/16 – 107.2

(iii) மார்ச் மாதம் 2014 மற்றும் 2016 வருடங்களில் மட்டும்தான் மின்பயன்பாடு குறைவாக உள்ளது.

3/2014 – 161.6

3/2016– 54.4

(iv) ஏப்ரல் மாதம் 2014 மற்றும் 2016ம் வருடங்களில் மட்டும்தான் மின்பயன்பாடு குறைவாக உள்ளது.

4/2014– 2624.8

4/2016– 160

11.10 எனவே, மேற்கண்ட நிகழ்வுகளின்படி எல்லா வருடங்களிலும் ஜனவரி முதல் ஏப்ரல் வரை மின்பயன்பாடு குறைவு என்று எடுத்துக் கொள்ள முடியவில்லை. ஆனால், அந்த மாதங்களில் சிலவற்றில் சில வருடங்களில் மின்பயன்பாடு குறைவு என்று கருதிட வாய்ப்பு உள்ளது.

11.11 மேற்கண்ட வருடங்களில் 2014ம் வருடத்தில் குறைவாக மின்பயன்பாட்டளவு பதிவு என்பது உற்பத்தி குறைவினால் ஏற்பட்டதா? அல்லது மீட்டர் பழுதினால் ஏற்பட்டதா? என்பதுதான் இந்த வழக்கு.

11.12 மேற்கண்ட பதிவுகளின்படி ஜனவரி, பிப்வரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் 2014ஐ தவிர வேறுசில வருடங்களிலும் குறைவான மின்பயன்பாடு மேற்கண்ட மின்இணைப்பில் இருந்துள்ளது என்று அறியமுடிகிறது.

11.13 இந்த மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின்இணைப்பில் ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் அரவை நடைபெறவில்லை என்று தெரிவித்து 2013 மார்ச் முதல் மார்ச் 2014 வரையில் அரைக்கப்பட்ட கொப்பரையின் அளவுகளை தெரிவித்துள்ளார்.

11.14 மேலும், கொப்பரை அரவை நடைபெறவில்லை என்பதற்கு ஆதாரமாக பட்டய கணக்காளரின் சான்றிதழ் மேரிக்கோ கம்பெனியிடமிருந்து அறிக்கை மேரிக்கோ கம்பெனியின் ஒவ்வொரு மாதமும் அரைக்கப்பட்ட quantity & Bill amountக்கான சான்று TDS பிடித்தத்திற்கு ஆதாரமாக Form 26 ஆகியவைகளையும் சமர்ப்பித்துள்ளார்.

11.15 மேற்கண்ட ஆவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது செக்ஷன் 194Cன் படி பிடிக்கப்பட்ட TDS தொகைகளையும் கொப்பரை அரவைக்கு பெறப்பட்ட கூலிக்கான

தொகையும் சரிபார்த்து ஜனவரி, பிப்ரவரி, மார்ச் 2014 ஆகிய காலங்களில் கொப்பரை அரவை இல்லை அல்லது குறைவு என்பதை உறுதி படுத்தஇயலவில்லை.

**11.16** மேலும், இந்த மின்இணைப்பில் உதவி பொறியாளர் எடுத்த ரீடிங்கை நான் ஆய்வு செய்ய விரும்புகிறேன். எதிர்மனுதாரர் **11/2013** முதல் **4/2014** மாதங்கள் வரை எடுக்கப்பட்டுள்ள மீட்டர் ரீடிங்களின் நகல்களை சமர்ப்பித்துள்ளார். அதில் voltage, current போன்ற 22 parameterகளின் ரீடிங் குறிக்கப்பட்டுள்ளது. இந்த மின்இணைப்பிலுள்ள மீட்டரில் Bphase voltage பதிவு இல்லை என்று வாதிடப்படுவதால் மேற்கண்ட மாதங்களில் உள்ள voltage பதிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

<u>Voltage Reading</u>

| | Date of reading | R ph | Y ph | B ph | MD | Consumption |
|---|---|---|---|---|---|---|
| (i) | **28.11.13** | **232.82** | **236.09** | **232.69** | **2.072** | **6628.4** |
| (ii) | **28.12.13** | **238.43** | **238.03** | **238.40** | **2.078** | **17226.8** |
| (iii) | **28.1.14** | **233.04** | **233.62** | **232.66** | **1.94** | **1819.2** |
| (iv) | **28.2.14** | **240.82** | **239.50** | **232.00** | **0.906** | **518.4** |
| (v) | **27.3.14** | **238.69** | **238.26** | **0** | **0.09** | **161.6** |
| (vi) | **26.4.14** | **201.14** | **205.68** | **0** | **0.853** | |
| (vii) | **29.4.14** | **231.28** | **239.20** | **0** | **0.775** | **2624.8** |

**11.17** மேற்கண்ட ரீடிங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது Bphase voltage zero என்று **27.3.2014, 26.4.14** மற்றும் **29.4.2014**ல் ரீடிங் எடுக்கும்போது பதிவாகி உள்ளது மற்ற மாதங்களில் Bphase voltage 232 V ற்கு மேல் இருந்துள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**11.18** B phase voltage பதிவு **28.2.2014**ல் ரீடிங் எடுக்கும்பொழுது **232** என்று பதிவு செய்யப்பட்டுள்ளது (இதில் **000** என்று எழுதப்பட்டு அடித்து **232.00** என்று பதிவு செய்யப்பட்டுள்ளது). ஆனால், **27.3.2014**ல் ரீடிங் எடுக்கும்பொழுது மீட்டரில் B phase voltage இல்லை என்றும் உதவி பொறியாளர் மின்மீட்டரின் ரீடிங் பதிவு செய்யும் பொழுது தனியாகவும் பதிவு செய்துள்ளார். எனவே, B phase voltage failure என்பது **28.2.2014**ல் ரீடிங் எடுத்த பிறகு **27.3.2014** ரீடிங் எடுக்கப்பட்ட இடைப்பட்ட காலத்தில் எப்பொழுது வேண்டுமானாலும்

ஆகியிருக்கலாம். மேலும், **26.4.2014** ரீடிங் B phase voltage zero என்றுதான் பதிவு ஆகியுள்ளது. எனவே, ஒரு phaseக்கு உண்டான பயன்பாடு B phase வோல்டேஜ் இல்லாத ஆன காலங்களுக்கு பதிவு ஆகி இருக்காது. மேலும், மேற்கண்ட B phase voltage failureக்கான காரணம் B phase PT fuse blown out என்று MRTயின் ஆய்வின் படி தெரிந்துள்ளது.

**11.19** மேற்கண்ட பத்தியில் விவரித்துள்ளபடி B phase failure **28.2.2014** முதல் **27.3.2014**ற்குள் ஏற்பட்டிருக்க வேண்டும் இங்கு மின்னளவியில் பதிவுகளை பதிவு இறக்கம் பண்ண முடியவில்லை என்று MRT தெரிவித்துள்ளதால் எந்த நாளில் மேற்கண்ட Bphse voltage failure ஏற்பட்டுள்ளது என்பது தீர்மானிக்க முடியவில்லை. மேற்கண்ட சூழ்நிலையில் B phase failure காலங்களில் ஒரு phase பயன்பாடு பதிவு ஆகி இருக்காது என்ற காரணத்தினால் **28.2.2014**ற்கு பிறகு B phase PT fuse renew பண்ணி மீட்டர் மாற்றப்பட்ட நாளான **29.4.2014** வரை மீட்டரில் பதிவு செய்யப்பட்டுள்ள பயன்பாட்டளவு அந்த கால இடைவெளியின் சரியான பயன்பாட்டளவு அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது. எனவே, **3/2014** மற்றும் **4/2014** கணக்கீடு காலத்திலும் **5/2014** கணக்கீடு காலத்தில் **26.4.2014** முதல் **29.4.2014** வரை மீட்டரில் பதிவு ஆகி உள்ள மின்பயன்பாடு அந்த மின்இணைப்பின் உண்மையான பயன்பாடு அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12.** <u>**வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வு**</u>

**12.1** மேல்முறையீட்டாளர் மின்னளவி பழுது என்று **1/2014** முதல் **4/2014** வரையிலான கணக்கீடு காலங்களுக்கு நிலுவைத்தொகை விதித்துள்ளது தவறு என்று வாதிட்டுள்ளார்.

**12.2** மேலும், **28.2.2014** முதல் **27.3.2014** வரையிலான காலங்களுக்கு ரூ.**11,222/–** செலுத்துமாறு கோரப்பட்டு செலுத்தியுள்ளதால் விடுபட்ட தொகை எதுவும் மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டியது இல்லை என்று வாதிட்டுள்ளார்.

12.3 மேல்முறையீட்டாளர் ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் 2014 ஆகிய மாதங்களில் தங்களுடைய தொழிற்சாலையில் மேரிக்கோ லிமிடெட் கம்பெனிக்காக கொப்பரை எதுவும் அரைக்கப்படவில்லை என்பதால் அந்த மாதங்களின் மின்சார பயன்பாடு வெளிச்சத்திற்காக (lighting purpose) மட்டும்தான் என்பதால் மிகவும் குறைவாகத்தான் இருந்துள்ளது என்று வாதிட்டுள்ளார்.

12.4 வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வின்படி 28.2.2014 முதல் 29.4.2014 வரை மேற்கண்ட மின்இணைப்பிலுள்ள மின்அளவியில் Bphase PT fuse Blown out என்பதால் அந்த காலங்களில் மின் அளவியில் பதிந்துள்ள மின் பயன்பாட்டளவுகள் தவறு என்று தீர்வு செய்யப்பட்டுள்ளது. அதாவது 3/2014, 4/2014 மற்றும் 26.4.2014 முதல் 29.4.2014 வரையிலான காலங்களுக்கு மின் அளவியில் பதிவாகியுள்ள பயன்பாடு தவறு. எனவே, அந்த காலங்களுக்கு மட்டும்தான் சராசரி பயன்பாட்டின்படி மின்கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டு நிலுவைத்தொகை வசூல் செய்யவேண்டும் என்பதால் ஏற்கனவே 1/2014 முதல் 4/2014 வரையிலான கணக்கீட்டு காலங்களுக்கு நிலுவைத்தொகை கணக்கீடு செய்தது தவறு என்று தீர்வு செய்யப்படுகிறது.

12.5 மின் அளவி பழுதான அல்லது செயல்படாமல் இருந்துள்ள காலங்களுக்கு அந்த கால இடைவெளியில் வழங்கப்பட்ட மின்சார பயன்பாட்டை கணக்கீடு செய்யும்முறை மின் வழங்கல் விதித்தொகுப்பின் விதி 11ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட B phase voltage failure காலங்களுக்கு மின்கட்டணம் சராசரி பயன்பாட்டளவின்படி தான் கணக்கீடு செய்யப்படவேண்டும் என்பதால் மின் வழங்கல் விதித்தொகுப்பின் விதி 11ன் படி மேற்கண்ட காலங்களுக்கு சராசரி பயன்பாட்டளவை கணக்கீடு செய்து நிலுவைத்தொகையை எதிர்மனுதாரர் நிர்ணயம் செய்யவேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**13. முடிவுரை**

13.1 என்னுடைய வழக்கெழு வினா ஒன்று, இரண்டு மற்றும் மூன்றிற்கான தீர்வின்படி மேற்கண்ட மின்இணைப்பில் 3/2014 & 4/2014 கணக்கீடு காலங்கள் மற்றும் 26.4.2014 முதல் 29.4.2014 வரையிலான காலங்களுக்கு மின்வழங்கல்விதித் தொகுப்பின் விதி 11ன் படி சராசரி பயன்பாட்டளவை கணக்கீடு செய்து மின்கட்டணம் வசூலிக்கப்படவேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

13.2 மேலும், மேல்முறையீட்டாளர், மேற்கண்ட காலங்களுக்கு ஏற்கனவே செலுத்தியுள்ள மின்பயன்பாட்டுத் தொகைகள் மற்றும் நிலுவைத் தொகையில் 25 சதவீத தொகையாக செலுத்திய ரூ.1,73,252/– தொகையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு மேல்முறையீட்டாளர் ஏற்கனவே செலுத்தியுள்ள தொகை அதிகமாக இருந்தால் அதிகமாக வசூலிக்கப்பட்ட தொகையை திரும்ப அளிக்க வேண்டும் அல்லது வருங்காலங்களில் உள்ள மின் கட்டணத்தில் சரிசெய்ய வேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது. மேல்முறையீட்டாளர் ஏற்கனவே செலுத்தியுள்ள தொகை அவர் செலுத்தவேண்டிய தொகையைவிட குறைவாக இருந்தால் விதிகளின்படி உரிய அறிவிப்பு வழங்கி மீதமுள்ள நிலுவைத் தொகையை வசூல் செய்யவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேற்கண்ட தீர்வை இந்த உத்தரவு கிடைத்த 30 நாட்களுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

13.3 மேற்கண்ட தீர்வை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கையை இந்த ஆணை கிடைத்த 45 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவு இடப்படுகிறது.

14.4 மேற்கண்ட முடிவுடன் தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.56/2016 இத்துடன் முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. B. சிவக்குமார்,
த/பெ. பி. பாலசுப்பிரமணியன்,
18/117, காந்தி நகர்,
திருப்பூர் ரோடு, காங்கேயம், திருப்பூர்.

2) மேற்பார்வை பொறியாளர்,
திருப்பூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
19ஏ, 19பி, ஜோதி நகர்,
பி.என். ரோடு, திருப்பூர் – 641 603.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
திருப்பூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
19ஏ, 19பி, ஜோதி நகர்,
பி.என். ரோடு, திருப்பூர் – 641 603.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – <u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.